தினமலர்

காஞ்சிபுரம்

28k M.F

# இலவச மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் அருகே, விஸ்வகர்ம சனாதன தர்ம அறக்கட்டளை, ஒய்.ஆர்.எஸ்.கே., மெடிக்கல் பவுண்டேஷன், மயிலாப்பூர் உதி கண் மருத்துவமனை, ஆகியவற்றின் சார்பில், இலவச கண் சிகிச்சை மற்றும் பொது மருத்துவ முகாம் நடந்தது.

அறக்கட்டளை தலைவர் முருகசெல்வம், சீனந்தல் மடாதிபதி ஸ்ரீசிவ.சிவராஜ சுவாமிகள் ஆகியோர் தலைமை தாங்கினர். முகாமில், ஏராளமானோர் கலந்து கொண்டு, சிகிச்சைப் பெற்றனர்.

காஞ்சிபுரம் மாவட்ட பொறுப்பாளர் ஜெகன்நாதன், முகாமிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.